1980 பிப்ரவரி 4]

வதைப்போல இருப்பதால், இந்த முறை ரத்து செய்யப்பட்டு உடனடியாக வேலைகளைத் துரிதப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே வேலைகளைத் துரிதப்படுத்த எந்தெந்த நடவடிக்கைகள் தேவை யோ அதை அரசு எடுக்கும்.

வேலைக்கான உணவுத் திட்டத்தின்கீழ் பெறப்பட்ட மான்யம்.

*வினா எண். 32.— திரு. மா. மணிமாறன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப் பாரா:—

தமிழ்நாட்டிற்கு 1979–80ம் ஆண்டிற்கு வேலைக்கு உணவுத் திட்டத்தின்கீழ் மைய அரசு அளித்த மானியம் எவ்வளவு?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : மான்யமாக பணம் வழங்கவில்லை. ஆனால் 47,000 டன் அரிசியை மானிய மாக 1979–80-ம் ஆண்டுக்கு இதுவரை ஒதுக்கியிருக்கிறது.

திரு. மா. மணிமாறன்: பேரவைத் தலைவரவர்களே, வேலைக்கு உணவுத்திட்டத்தின் கீழ் ஒதுக்கப்பட்ட தொகை அவ்வ ளவும் செலவழிக்கப்பட்டிருக்கிறதா? இப்பொழுது செலவழிக்கப் பட்டிருக்கிற அரிசியில் பழுப்பு ஏறியிருப்பதால் பல ஒன்றியங் களில் அரிசி திருப்பி அனுப்பப்பட்டு வேலைக்குத் தடங்கல் ஏற்பட்டிருக்கிறது என்று அறிகிறேன். அப்படியிருந்தால் புதிய அரிசியை இந்த ஆண்டு முடிவதற்குள்ளாக அந்தத் தலைப்பில் ஒதுக்கியதைச் செலவு செய்ய அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே, இதுவரையில் 11.33 இலட்சம் தொழிலாளர்கள் வேலைவாய்ப் புக்களைப் பெற்றிருக்கிறார்கள். ஊதியமாக ரூ. 3,18,69,000 மதிப்புள்ள 21,246 டன் அரிசி இதுவரை வழங்கப்பட்டிருக் கிறது. மாண்புமிகு உறுப்பினரவர்கள் குறிப்பிடுவது போன்ற புகார்கள் எதுவும் வரவில்லை.

[1980 பிப்ரவரி 4

[முற்பகல் 9–40]

திரு. கு. ரமணி : தலைவரவர்களே, மைய அரசு வேலைக்கு உணவு என்ற இந்ததிட்டத்திற்கு தரக்கூடியது அரிசி மட்டும்தானா? அல்லது பணம் ஏதாவது மைய அரசால் தரப் படுகிறதா? அப்படிக் கொடுக்கக்கூடியது பூராவும் இத் திட்டத் திற்கே பயன்படுத்தப்படுகிறதா? அல்லது மாநில அரசு தன்னு டைய மாநில திட்டங்களுக்கும் பயன்படுத்தப்படுகிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே, மைய அரசு பணம் எதுவும் தரவில்லை. அவர்கள் கோதுமையை மட்டுமே பயன்படுத்த வேண்டுமென்று இதற்கு முன்னாலே குறிப்பிட்டிருந்தார்கள். 1979 மார்ச் இறுதியில், தமிழக முதல்வர் இந்தியப் பிரதமருக்கு எழுதிய நேர்முகக் கடிதத்தில் இதற்கென்று அரிசியைப் பயன்படுத்த மைய அரசு அனுமதிக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டிருந்தார். எந்த அளவிற்கு கோதுமை தரப்படும் என்று அறிவிக்கப்பட்டதோ அந்த அளவுக்கு ஏற்பத்தான் மைய அரசு அரிசியைக் கொடுக்க ஒப்புக் கொண்டிருக்கிறது. 47,000 டன் அரிசியை மைய அரசு 1979–80-ல் ஒதுக்கியிருந்தது. உபரி தானிய இருப்பிலே இருந்து 2.5 இலட்சம் டன் அரிசியை உபயோகிக்க மைய அரசை மாநில அரசு அனுமதி கேட்டிருக் கிறது. அனுமதி எதிர்பார்க்கப்படுகிறது.

டாக்டர் கே. சமரசம் : பேரவைத் தலைவரவர்களே, வேலைக்கு உணவுத் திட்டத்தின் கீழ் தர்மபுரி மாவட்டத்திற்கு கேட்டது எவ்வளவு. அதில் தர்மபுரி மாவட்டத்திற்கு கொடுத்தது எவ்வளவு? வரட்சிப் பகுதியை வளர்ச்சிப் பகுதியாக்க அரசு மேலும் அரிசி தர முன்வருமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவரவர்களே, மாவட்ட வாரியாக விவரம் இல்லை. ஆனால் அரிசி போதுமான அளவுக்கு இல்லையென்கிற அளவு குறைபாடு இல்லை.

திரு. இரெ. இராசமாணிக்கம்: பேரவைத் தலைவர் அவர்களே, சில ஊராட்சி ஒன்றியங்களில் வேலைக்கு உணவுத்திட்டத்தின் கீழ் கொடுக்கப்பட்ட அரிசி ஆளுங்கட்சி அமைப்பாளர்களின் மூலம் விநியோகிக்கப்படுகிறது என்கிற புகார் அரசுக்கு வந்ததா? அடுத்தது, நெடுஞ்சாலைத்துறை, ஊராட்சித்துறை, நகராட்சிகள் துறையிலே வேலை செய்வதற்கு, ஷெட்யூல் ஆப் ரேட்ஸ் இருக்கிறது. அதன்படி, அதற்கு ஈடான அரிசியை அரசு கொடுக்கு மா என்பதை அறிய விரும்புகிறேன்.

1980 பிப்ரவரி 4]

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப் போன்ற புகார்கள் எதுவும் வரவில்லை. ஆனால், இது தொடர்பாக முழுமையாக அரிசியும் கொடுக்கப்படுகிறது. ஒரு பகுதி பணமாகவும் ஒரு பகுதி அரிசியாகவும் கொடுக்கப்படுகிறது. முழுப் பகுதியை அரிசியாக கொடுக்கக்கூட அரசு தயாராக இருக்கிறது.

திரு. வி. கொ. சின்னசாமி : பேரவைத் தலைவரவர்களே, வேலைக்கு உணவுத் திட்டம் மூலம் கொடுக்கப்படுகிற அரிசி, பணம் 15 நாட்களுக்கு ஒரு முறை என்று வழங்கப்படுகிறது. பொதுவாக கிராமப் பகுதிகளில் வாரத்திற்கு ஒரு முறை என்றும் எந்தெந்த நல்த சந்தை நாள் வருகிறதோ அந்தச் சந்தை நாளுக்கு நளேிஒள் முன்பாகக் கொடுத்தால் மிகவும் பயன்படும் என்றும், ருஆடு எங்கள் பகுதிகளில் ரூ. 6 என்று கொடுக்கிறார்கள். இப்பொழுது கூல ரூ. 7, ரூ. 8 என்றிருக்கிறது. ஆகவே கொஞ்சம் அதிகப்படி கொடுத்தால் பெரியார் மாவட்டத்தில் வேலைக்கு உணவுத் திட்டம் முழுமையாக அமுல்படுத்தப்பட்டிருக்கும் என்ற கருத்தை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே, அதிகப்படுத்த வாய்ப்பு இல்லை. ஆனால் மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டதைப்போல் வாரத்திற்கு ஒருமுறை கொடுப்பது என்கிற முறையை அரசு நிச்சயமாகப் பரிசிலிக்கும்.

திரு. அ. செல்லப்பா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலைக்கு உணவுத் திட்டத்தின் கீழ் சீரமைக்கப்படும் கப்பி சாலைகளில், கப்பிகளைப் போட்டு சீரமைப்பதற்குப் பதிலாக மண் போடப்பட்டு அந்தச் சாலைகள் பெரிதும் பாதிக்கப்பட்டிருப்பது அரசுக்குத் தெரியுமா? சீரமைக்க பெரிய தொகை செலவிடப்பட வேண்டுமென்று அரசுக்குத் தெரியுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவரவர்களே, இந்தத் திட்டத்தின் மூலம் ஓரளவுக்குத்தான் பயன்படுத்த முடியும். இதை முழுமையாக சாலைகளைச் செப்பனட பயன்படுத்த முடியாது.

திரு. பொ. உத்திராபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலைக்கு உணவுத் திட்டம் வரவேற்கவேண்டிய திட்டம். ஆனால், அதே நேரத்தில் கிராமங்களில் வேலை செய்யும்போது அளவு அடிப்படையில் கொடுப்பதால் வேலையில் பெரிய அளவு மாற்றம் ஏற்படுவதில்லை. ஆகவே, அளவை நீக்கி அன்றாடம் வேலை கொடுக்க அரசு முன்வருமா என்பதைக் கேட்பதோடு தனியார் குளங்களை வெட்ட அதிகாரிகள் முட்டுக்கட்டை

யாக இருக்கிறார்கள். பெரும் பகுதி கிராமங்களில் தனியார் குளங்கள் இருப்பதால் அவற்றையும் வெட்ட அரசு அனுமதிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டதைப் போன்ற சிக்கல்கள் இதுவரை அரசுக்குத் தெரியவில்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறித்துக் கொடுத்தால், அது குறித்து விசாரித்து நடவடிக்கை எடுக்கலாம்.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : தலைவரவர்களே, இந்த வேலைக்கு உணவுத் திட்டத்தின்கீழ் மாநிலம் பூராவும் ஒரே வகையான ஊதியம் வழங்கப்படுகிறதா, மாறுதல் இருக்கிறதா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : மாறுதல் எதுவும் இல்லை.

திரு கே. எம். அப்துல் ரசாக் : இந்த வேலைக்கு உணவுத் திட்டத்தில் கன்னியாகுமரி மாவட்டத்தில் சில முறைகேடுகள் நடந்திருப்பதாக பத்திரிகைகளில் செய்தி வந்திருக்கிறது. அது உண்மையா ? தேர்தலுக்குப் பிறகு இந்த வேலைகள் முடக்கி வைக்கப்பட்டிருப்பதாக அறிகிறேன். அந்தச் செய்தி உண்மையா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : அதுபற்றிய புகார்கள் என்னிடத்தில் நேரடியாகக் கொடுக்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

திரு. கெ. சொக்கலிங்கம் : பேரவைத் தலைவர் அவர்களே, வேலைக்கு உணவு என்ற திட்டத்தின் கீழ் ஊராட்சி ஒன்றியங்களுக்கு அரிசி வழங்கப்படுகிறது. சில ஒன்றியங்களில் இந்த வேலை அதிகம் இல்லாமல் அரிசி தேங்கி இருக்கின்றது. சில ஒன்றியங்களில் வேலை முடிந்து அரிசி இல்லாமல் இருக்கிறது. எனவே அரிசி இருக்கிற ஒன்றியங்களில் இருந்து, வேலை செய்தும் அரிசி இல்லாமல் இருக்கின்ற ஒன்றியங்களுக்கு வழங்கப்படும் உத்தேசம் அரசுக்கு இருக்கிறதா ? அடுத்தபடியாக, சாலைக்கு மட்டும் இந்தத் திட்டம் இருக்கிறது. தற்போது சில கிராமங்களில் குடிநீர் பிரச்சினை அதிகமாக இருக்கிறது. எனவே இத்திட்டத்தின் கீழ் கிணறு வெட்டவும் ஏற்பாடு செய்ய அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

1980 பிப்ரவரி 4]

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: பேரவைத் தலைவர் அவர்களே, சாலை போடுவதற்கு மட்டும் அல்லாமல், ஏரிகள் தூர் வாருவதற்கும், ஏரிகள் கால்வாய்கள் வெட்டுதல், பாசன வரத்துக்கால்வாய்களைப் பழுது பார்த்தல் ஆகிய பணிகளுக்கும் இந்தத் திட்டத்தைப் பயன்படுத்தலாம். சில ஒன்றியங்களில் அரிசி தேங்கி இருக்கிறது. சில ஒன்றியங்களில் அரிசி இல்லை என்று குறிப்பிட்டார்கள். அது எந்தெந்த ஒன்றியங்களில் இல்லை என்கின்ற தகவல் கிடைத்தால் அவைகளுக்கு அரிசி வழங்குவதற்கு நிச்சயமாக ஏற்பாடு செய்யப்படும்.

திரு. சி. ராமநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வேலை ஊராட்சி ஒன்றியங்களின் மூலமாகச் செய்யப்படும்போது, ஊராட்சி ஒன்றியங்களிலே இருக்கின்ற ஒரு கிராம சேவக் பல இடங்களிலும் சென்று அந்த வேலைகள் சரியாக நடைபெறுகிறதா என்று மேற்பார்வை செய்ய போதுமான வசதி இல்லாத காரணத்தினால் அதைக் கண்காணிக்க வாய்ப்பில்லாமல் போய்விடுகிறது. அப்படி அந்த வேலைகளை பராமரிப்பதற்கு தகுந்த ஏற்பாடுகளைப் செய்ய இந்த அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, அதற்கென ஏற்பாடுகளை அந்தந்த ஒன்றியங்கள் மேற்கொள்ள வேண்டும்.

திரு. ரா. கிருஷ்ணன்: தலைவர் அவர்களே, இந்த வேலைக்கு உணவுத் திட்டத்தை பராமரிப்பதற்காக அல்லது கண்காணிப்பதற்காக அனைத்துக் கட்சியில் இருந்து மக்கள் கண்காணிப்புக் குழு என்று ஒன்று அமைக்கப்படுமா? நெல்லை மாவட்டத்தில் தற்போது இந்த வேலை நிறுத்தப்பட்டிருப்பதாக அறிகிறேன். அதைப் பற்றியும் அறிய விரும்புகிறேன். அதோடு தற்போது மண்வேலை மட்டும்தான் செய்யப்படுகிறது. ஒன்று கட்டுமான வேலை செய்யலாம். அடுத்து மெட்டல் ரோடு போடும் வேலை செய்யலாம். அப்படிப்பட்ட திட்டத்தை அமல்படுத்துவதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, எல்லா மக்கள் பிரதிநிதிகளும் இதைக்கண்காணிப்பதற்கு உரிமை உண்டு. இதுபற்றி புகார் இருந்தால் தெரிவிப்பதற்கு உரிமை உண்டு. அப்படித் தெரிவித்தால் அரசு நிச்சயமாக நடவடிக்கை எடுக்கும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்ததைப் போல அந்தந்தப் பகுதியின் தேவைகளை உத்தேசித்து இந்தத் திட்டத்தைப் பயன்படுத்த அரசு நடவடிக்கை மேற்கொள்ளும்.

திரு. துரை முத்துசாமி : தலைவர் அவர்களே, வேலைக்கு உணவுத் திட்டம் என்றும், "கவர்ன்மென்ட் எம்ப்ளாய்மென்டு காரன்டி ஸ்கீம்'' என்றும் இரண்டு திட்டங்கள் இருப்பதாக அறிகிறேன். அதற்கு மத்திய அரசும் மாநில அரசும் எவ்வளவு நிதி ஒதிக்கியிருக்கின்றன என்பதை அறிய விரும்புகிறேன். ஒவ்வொரு ஒன்றியத்திற்கும் எவ்வளவு நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது. சில மாவட்டங்களில் இது நிறுத்தப்பட்டிருக்கிறது. தென்னார்க்காடு மாவட்டத்தில் 31—12—1979 முதல் நிறுத்தப்பட்டிருப்பதாக அறிகிறேன். அங்கு வேலைக்கு உணவுத் திட்டத்தை நிறுத்திவிட்டு "கவர்ன்மென்ட் எம்ப்ளாய்மென்டு காரன்டி ஸ்கீம்'' நடந்து கொண்டு இருக்கிறது. இது குறித்து விவரங்களை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, அரிசி உடனடியாகக் கிடைக்காத காரணத்தாலே ஒருவேளை அந்தத் திட்டங்கள் தாமதப்பட்டிருக்கலாம். ஆனால் இப்போது அரிசி ஒதுக்கீடு செய்யப்பட்டு அனுப்பப்பட்டிருப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறது. மத்திய அரசு எவ்வளவு நிதி ஒதுக்கீடு செய்திருக்கிறது, மாநில அரசின் நிதி எவ்வளவு என்றெல்லாம் கேட்டார்கள். இது குறித்து தனியாகக் கேட்டால் விவரங்கள் தரப்படும்.

திரு. கா. வே. கந்தசாமி : தலைவர் அவர்களே, பொள்ளாச்சி வட்டத்தில் கடந்த 20 நாட்களாக வேலை செய்தவர்களுக்கு அரிசி கொடுக்கவில்லை என்ற குறையும், மேலும் சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷனில் இருந்து உடனடியாக அரிசி அனுப்புவதில் தாமதம் ஆகிறது. இதனால் வேலைநிறுத்தப்பட்டிருக்கிறது. அந்த வேலைகள் மீண்டும் தொடங்கப்படுமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, நிறுத்தப்பட்ட வேலைகள் தொடரும்.

திரு. பெ. சு. திருவேங்கடம் : தலைவர் அவர்களே, வடார்க்காடு மாவட்டத்தில் தற்போது நடைபெறும் வேலைக்கு உணவுத் திட்டத்திற்காக 2,000 டன் அரிசி தேவை என்று அதிகாரிகள் சொல்லுகிறார்கள். பல இடங்களில் அரிசி கிடைக்கவில்லை என்று சொல்லுகிறார்கள். எனவே அமைச்சர் அவர்கள் வடார்க்காடு மாவட்டத்திற்குத் தேவையான அரிசியைத் தர ஏற்பாடு செய்வார்களா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, எல்லா மாவட்டங்களுக்கும் உரிய, நியாயமான அளவு அரிசி அனுப்பப்படும்.

1980 பிப்ரவரி *]

[முற்பகல் 9–50]

திரு. சி. கோவிந்தராசன் : பேரவைத் தலைவர் அவர்களே, வேலைக்கு உணவுத் அளிக்கும் திட்டத்தில் இப்படிப்பட்ட புகார்கள் வரக்கூடிய காரணத்தால், அதைக் கண் காணிக்க ஒரு அட்வைசரி கவுன்சில் போடப்பட்டது. அந்தக் கவுன்சில் கூட்டப்படுவதே இல்லை. அதற்கான காரணம் என்ன? அதைக் கூட்டுவதற்கான நடவடிக்கை எடுக்க அமைச்சர் முன் வருவார்களா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, அதை கண்காணிக்க அந்தக் குழு கூட்டப்படவேண்டிய அவசியம் இல்லை. நேரடியாகப் பார்த்து ஏதாவது புகார் இருந்தால் தெரிவிக்கலாம்.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவர் அவர்களே, இந்தத்திட்ட மானது இப்போது பல்வேறு மாவட்டங்களில் நிறுத்தப்பட்டு இருப்பதாக இங்கே புகார் கூறப்பட்டது. மத்தியில் புதிய அரசு பொறுப்பேற்ற பிறகு இந்தத் திட்டத்தைக் கைவிட வேண்டும் என்ற எண்ணம் இருப்பதாகக் கூறப்படுகிறது. ஆகவே, எக்காரணத்தைக் கொண்டும் மத்திய அரசு இந்தத் திட்டத்தை கைவிடக்கூடாது என்று வலியுறுத்த இந்த அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, அதற்காகத்தான் 2 லட்சம் டன் ஒதுக்கித் தரவேண்டும் என்று கேட்டு இருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரின் ஒத்துழைப்பு பெற்று இந்தத் திட்டத்தை நிறுத்தக் கூடாது என்று வற்புறுத்துவோம்.

திரு. துரை முத்துசாமி: தலைவர் அவர்களே, பாயின்ட்ஆஃப் ஆர்டர். 31—12—1979 அன்றைக்கே நிறுத்தப்பட்டுவிட்டது அந்தத் திட்டம் என்று குறிப்பிட்டேன். 31—12—1979 அன றைக்கு புதிய அரசு மத்தியில் பொறுப்பேற்கவில்லை. இங்கே மாண்புமிகு ஜனதா கட்சி தலைவராக இருக்கும் திரு. ஜேம்ஸ் அவர்கள் இங்கே அந்தப் பிரச்னையை மிஸ்லீட் செய்யப்பார்க் கிறார்கள்.

THIRU J. JAMES: There is no point of Order during question hour. This Point of order should not be allowed.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. துரை முத்துசாமி உட்கார வேண்டும்.

திரு. துரை முத்துசாமி : * * *

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. துரை முத்துசாமி, நீங்கள் பேசுகிறபோது அதற்குப் பதில் சொல்லுங்கள். கேள்வி நேரத்தில் பாயினட் ஆப் ஆர்டர் கிடையாது என்று ஏற்கனவே சொல்லியிருக்கிறேன். (குறுக்கீடு) திரு. துரை முத்துசாமி பேரவைத் தலைவரோடு ஒத்துழைக்க வேண்டும். குற்றச்சாட்டு இருந்தால், அதுகுறித்து பின்னர் கேட்கலாம். அதற்காக, கேள்வி நேரத்தில ஒரு விவாதம் நடத்துவதற்கு அனுமதிக்க முடியாது. ஒரு உறுப்பினர் கூறியது, தவறு என்று சொன்னால், அது குறித்து தவறு என்று வாதிடுவது கூடாது. அப்படிச் செய்தால், அது கேள்வி நேரமாக இருக்க முடியாது. ஆகவே, இப்போது பாயின்ட் ஆப ஆர்டர் அனுமதிக்க முடியாது.

திரு. துரை முத்துசாமி : * * *

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது குறித்து நான் குறிபபேட்டைப் பார்த்துத்தான் சொலவேன். உறுப்பினர் சொல்வதைக் கேட்டுக்கொண்டு நீக்க முடியாது. (குறுக்கீடு) இப்படி இரண்டு உறுப்பினர்களும் ஒரே நேரத்தில் எழுந்து பேசுவது ஒழுங்கு அல்ல. தயவுசெய்து, உட்கார வேண்டும்.

திரு. துரை முத்துசாமி : * *

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உறுப்பினர் இப்படிப பேசிக்கொண்டே இருப்பது ஒழுங்கல்ல. உறுப்பினர் பேரவையின் விதிகளைப் படித்து அறிந்து இருப்பார் என்று நினைத்தேன். திரு. துரை முத்துசாமி, உட்காரவேண்டும்.

திரு. துரை முத்துசாமி : * *

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உரத்த குரல் உங்களுக்குத்தான் இருக்கிறதா? உங்களுக்குத்தான் அவையில் பேசுவதற்கு நேரம் ஒதுக்கப்பட்டு இருக்கிறதா? உட்காருங்கள். திரு. துரை முத்துசாமி பேசிய அனைத்தையும் நீக்கும்பம உத்தரவிடுகிறேன்.

---

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

1980 பிப்ரவரி 4]

திரு. துரை மூத்துசாமி: * * *

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் உட்காருகிறீர்களா, இல்லையா? முதலில் பேரவையின் கண்ணியத்தைச் காப்பாற்றுங்கள்.

அண்ணா போக்குவரத்துக் கழகப் பேருந்துப் பயணச் சீட்டுகள்.

*வினா எண். 33—திரு. ப. சுந்தரம்: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) அண்ணா போக்குவரத்துக் கழகப் பேருந்து பயணச் சீட்டுகளில் அண்ணா உருவப் படத்தை அச்சடிக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், இது எப்போது முதல் செயல்படுத்தப் படும்?

திரு. ப. கோ. கிட்டு (அமைச்சரின் பேரவைச் செயலர்):

(அ) அண்டு (ஆ) அண்ணா உருவம் பொறிக்கப்பட்ட பயணச்சீட்டுக்களை அண்ணாவின் பிறந்த நாளாகிய 15—9—1979 முதல் அண்ணா போக்குவரத்துக் கழகம் உபயோகித்து வருகிறது.

பாண்டியன் போக்குவரத்துக் கழகத்தின் இராமநாதபுரம் பிரிவுப் பணியாளர்கள்.

*வினா எண். 34—திரு. த. இராமசாமி: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் பிரிவில் பாண்டியன் போக்குவரத்துக் கழகத்தில் பணிபுரியும் தொழிலாளர்கள் 1977 மே மாதத்திலிருந்து 1978 மே மாதம் வரை வேலைநீக்கம் செய்யப்பட்டவர்கள் எத்தனை பேர்? ஊர் மாற்றம் செய்யப்பட்டவர்கள் எத்தனை பேர்?

---

* * மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.